வில்லை என்று யாரும் சொல்ல முடியாது. நடவடிக்கை எடுத்து, அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சிற்சில குறைபாடுகள் வருகின்றபோது இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது தீர்க்கப்படும். உங்களுடைய யோசனைகளும் மேற்கொள்ளப்படும். அது எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 152, திரு. மு. வெங்கடராம ரெட்டி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

152—

தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

*9966—திரு. மு. வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியை ஊராட்சி ஒன்றியமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து அஞ்செட்டியை ஊராட்சி ஒன்றியமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. மேலும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெறுவதால் மார்ச் 1993 வரை உள்ளாட்சி நிறுவனங்களில் எந்தவித நிர்வாக மாறுதல்களும் செய்தல் கூடாது என அரசின் தடையாணை அமுலில் உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

Thiru M. VENKATARAMA REDDY: Hon. Speaker, Sir, the Thali Panchayat Union is one of the biggest Panchayat Unions in Tamil Nadu. It consists of 50 Panchayats and its area is more than 100 miles in length and 50 miles in breadth. It consists mostly of hilly and forest area where the tribal population is predominant. Though it consists of 50 Panchayats, the grants given to it are the same as those given to a Panchayat Union with 20 Panchayats. In these circum-

stances, the area cannot be developed in any way unless the Union is bifurcated and a seperate Tribal Union is created. Already, the District Development Council, Dharmapuri has passed a resolution in this regard and sent it for approval to the Government. I request the Hon. Minister to take this into consideration at least in the next financial year and bifurcate this Union into two and establish a seperate Panchayat Union as a Tribal Union exclusively. The expenses can be met by the Central Government. So, I would like to know whether the Ho . Minister would recommend the formation of a seperate Tribal Union so that the entire expenses of that Union could be met by the Central Government.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் சீரமைக்கும் பணி நடைபெறுவதால் உள்ளாட்சி நிறுவனங்களில் 1—8—1992 முதல் எவ்வித நிர்வாக மாறுதலும் செய்யக்கூடாது என்று அரசின் தடையாணை இருந்தது. தற்போது இந்தத் தடையாணை 18—3—1993இல் விலக்கிக் கொள்ளப்பட்டது. அரசுக்கு ஏற்படுகிற கூடுதல் செலவினங்கள் பரிசீலிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை தமிழக முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா, எண் **153**, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

153—

அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் குரங்குகள் தொல்லைகளைப் போக்குதல்.

*13319— திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் குரங்குகளின் தொல்லையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?